## தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தி முதல் 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதகைமையினை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளாமை | 2.1.2 |
| | | 2. | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை | 2.4 |
| | | 3. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.5 |
| | | 4. | பொது வைப்புக் கணக்கு தொடர்பான அவதானிப்புக்கள் | 2.6 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் | | பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றலிலான குறைபாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும். | | |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும்<br><br>(இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்துதல்) | நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றம் அடையப்பெற்றிராத செயற்திட்டங்கள் | 2.1.1 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள்

பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்கான உத்தியோகபூர்வ இல்லமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கான மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 14,348,792 ஆக இருந்ததுடன், அவற்றுள் 98 சதவீதமான அளவான ரூபா 14 மில்லியன் மூன்று சந்தர்ப்பங்களில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 5.6 மில்லியனுக்காக செயன்முன்னேற்ற அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிர்மாணங்களை தொடர்புபடுத்திய வேலை அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இந்த பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டிற்குரிய திணைக்களத்தினால் தமது விடய எல்லைக்குட்பட்டதான பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருக்க வேண்டும். எனினும், அவ்வாறு அறிந்திருக்காமையால் அதன் பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளை நோக்கி அண்மிக்க வேண்டிய அடைவுகளும், இலக்குகளை அண்மித்தலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) அரசிற்கு சொந்தமான சொத்துக்களை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தாமை**

புத்தசாசன அமைச்சிற்குரிய வளாகத்தில் அமைந்துள்ள பௌத்த அலுவல்கள் தொடர்பான திணைக்களத்திற்குரிய கட்டிடத்தின் பழுதுபார்த்தல் பணிகள் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதியினுள் அதற்காக ரூபா 9,927,887 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அதன் ஒரு பகுதி தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு ஆக்கபூர்வமான பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் முடியாது போயிருந்தது.

**(ஆ) எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை**

அரசின் வாகனங்களை பராமரித்தல் தொடர்பில் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் எந்தவொரு எரிபொருள் பரிசோதனைக்குப் பின்னரும், 12 மாதக் காலப்பகுதியில் அல்லது 25,000 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்புடைய பிரதான பழுதுபார்த்தலின் பின்னர் ஆகிய விடயங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான 06 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்படவில்லை.

2.3 முகாமைத்துவ நலிவுகள்

**பொதுமக்களுக்கான சேவையினை நிறைவேற்றுதல்**

2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(I) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கமைய அனைத்து அரச நிறுவனங்களினதும் பிரசைத்துவ விஞ்ஞாபனத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் இடம்பெற வேண்டும். எனினும், திணைக்களத்தினால் பிரசைத்துவ விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 598.77 | 578.05 | 20.72 | 3.46 |
| | மூலதனம் | 116.60 | 103.89 | 12.71 | 10.90 |
| | மொத்தம் | **715.37** | **681.94** | **33.43** | **4.67** |
| **2014** | மீண்டுவருபவை | 766.42 | 740.72 | 25.70 | 3.35 |
| | மூலதனம் | 80.05 | 73.41 | 6.64 | 8.29 |
| | மொத்தம் | **846.47** | **814.13** | **32.34** | **3.82** |
| **2015** | மீண்டுவருபவை | 962.76 | 928.63 | 34.13 | 3.54 |
| | மூலதனம் | 93.75 | 85.55 | 8.20 | 8.75 |
| | மொத்தம் | **1,056.51** | **1,014.18** | **42.33** | **4.00** |
| **2016** | மீண்டுவருபவை | 1,216.49 | 1,102.16 | 114.33 | 9.39 |
| | மூலதனம் | 48.27 | 44.27 | 4.00 | 8.29 |
| | மொத்தம் | **1,264.76** | **1,146.43** | **118.33** | **9.35** |
| **2017** | மீண்டுவருபவை | 1,287.89 | 1,113.55 | 174.34 | 13.54 |
| | மூலதனம் | 55.45 | 50.57 | 4.88 | 8.88 |
| | மொத்தம் | **1,343.34** | **1,164.12** | **179.22** | **13.34** |

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

09 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டின் 15 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு முறையாக பேணப்பட்டிராததுடன், நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.6 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான பொது வைப்புக் கணக்கொன்றில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 7.43 மில்லியனாகும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 600-0-0-1-36 பிணை வைப்புக் கணக்கு

இலங்கை வங்கியின் 0002323299 ஆம் இலக்கமுடைய நடைமுறைக் கணக்கு இரத்துச் செய்யப்பட்டு, அந்தக் கணக்கின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதியான ரூபா 6,832,155 தொகையான பணம் 6000-0-0-1-36 ஆம் இலக்கமுடைய பிணை வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த நடைமுறைக் கணக்கு நாடெங்கிலுமுள்ள விகாரைகளின் பஸ்நாயக்க நிலமேக்களை நியமிக்கும் போது, அவர்களால் பிணையாக வைப்புச் செய்யப்படும் பணத்தை வைப்பு செய்வதற்காக பயன்படுத்தப்படுவதுடன், தேசிய சேமிப்பு வங்கியில் பேணிச் செல்லப்பட்ட நிலையான வைப்புக்களுக்கான வருடாந்த வட்டி வருமானமும் இந்த கணக்கிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. பிணையாளர்களை வினவி இந்த பணத்தை மீள செலுத்துவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 349 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 481,379 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 12 | 11 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 776 | 680 | 96 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 36 | 29 | 07 |
| (v) | அமைய/ஒப்பந்தம் / | 08 | 05 | 03 |
| | **மொத்தம்** | 833 | 725 | 108 |